JUDICIAL FORM NO.53

( See Rule 42)

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**Respondent absent**. 126(2) **crpc petition filed and allowed**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 14.12.2023

**M.C.6/2012** **Name**:யாஷ்மின் **W/o**.நுரேஆலம் **P**.**W**.1

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) ம.சா.ஆ.2 எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் 21.04.1996ம் பொள்ளாச்சியில் பெரிய பள்ளிவாசலில் பதிவு செய்த பதிவு சான்றிதழ் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 உருதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் தமிழிலும் கொடுத்துள்ளார்கள். தமிழில் யார் மொழியாக்கம் செய்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் பெரிய பள்ளி வாசலில் செயலாளர் தான் மொழியாக்கம் செய்து கொடுத்தார். ம.சா.ஆ.2 தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உருதில் உள்ளது அப்படியே தமிழாக்கம் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். பெரியதாக உள்ளதை வெறும் 4 லைன்களில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் முக்கியமான சாராம்சம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எனக்கு தேவையானதை மட்டும் நான் எழுதி வாங்கி வந்தேன் என்றால் சரியல்ல. 32 பவுன் நகையும் 25 ஆயிரம் பணம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது 1ம் மனுதாரர் கொடுத்த மகர் பற்றி குறிப்பிடவில்லை என்றால் மகர் கொடுக்காததால் அது பற்றி குறிப்பிடவில்லை. மகர் ரூ.5,525/- கொடுக்கப்பட்டது பற்றி ம.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**3) எனக்குத் தெரிந்த பள்ளிவாசல் என்பதால் எனக்கு தேவையானதை மட்டும் எழுதிப் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 என்னால் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 எப்போது கொடுக்கப்பட்டது என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை 21.10.2025ம் தேதி தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு சாதகமாக இந்த ஆவணத்தை உருவாக்கி தாக்கல் செய்துள்ளதால் இந்த ஆவணம் சட்டப்படி ஏற்படுவது இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 32 பவுன் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வரதட்சணை கொடுமை புகாரில் 50 பவுன் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வெளியே செய்த சீர்வரிசைகளையும் கணக்கிட்டு சொல்லி உள்ளேன். என்னுடைய புகாரில் அதுபோல் சொல்லவில்லை தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை